இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 26.08.2026

# சொன்ன பொய்யை தானே மறுக்கும் பொய்யர்கள்!

தேர்தலுக்கு முன்னதாக என்ன பேசினார் விஜய்? 'மாநிலத்தையே கடனாளி ஆக்கிவிட்டது தி.மு.க.' என்று சொன்னார். 'தமிழ்நாடே நிதி நெருக்கடியில் இருக்கிறது' என்றார். 'கஜானா காலி' என்றார். 'எல்லா வற்றையும் துடைத்து வைத்து விட்டுப் போய்விட்டார்கள்' என்றார். 'ஊரான் வீட்டு நெய்யில் அவர்கள் குடும்பத்துக்கு ஸ்வீட் செய்துவிட்டார்கள்' என்றார். 'தனி கமிஷன் வாங்குவதை நிறுத்தினாலே எதற்கும் கடன் வாங்கத் தேவையில்லை' என்றார். இப்படி பேசிய எதற்கும் அவருக்குப் பொருள் தெரியவில்லை. அந்த வார்த்தைகளின் அர்த்தம் தெரிந்து அவர் பேசவில்லை என்று இப்போது உணர முடிகிறது.

முதலமைச்சராக வந்த விஜய், இந்த மூன்று மாதங்களாக என்ன செய்கிறார்? இதுவரை தான் பேசியது அனைத்தும் பொய்தான் என்பதை அவரே நிரூபித்துக் கொண்டு இருக்கிறார். அதாவது "தான் ஒரு மகா மகா பொய்யர்" என்பதை நிரூபித்துக் கொண்டு இருக்கிறார்.

**முதலமைச்சராக வந்த விஜய், இந்த மூன்று மாதமாக என்ன செய்கிறார்? கடன் வாங்கிக் கொண்டு இருக்கிறார். அது ஒன்றைத்தான் செய்கிறார். கடன் வாங்கி மக்களுக்கு ஏதாவது நலத் திட்டம் உருவாக்கப் போகிறாரா? அதற்கான அறிவிப்பை விட்டாரா என்றால் இல்லை. மாறாக, எம்.எல்.ஏ. ஆகி இருக்கும் அவர்களது ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவர்களுக்கு கார் கொடுக்கப் போகிறார். அதாவது அரசாங்க நெய்யில் ரசிகர் மன்றத்து ஆட்களுக்கு ஸ்வீட் செய்து தரப்போகிறார்.**

இவர்களில் பலருக்கும் கார் இருக்கிறது. ஆனாலும் கார் கொடுக்கப் போகிறாராம். அந்தக் காரைப் பராமரிக்க 75 ஆயிரமாம். உதவியாளருக்கு 25 ஆயிரமாம். இப்படி காருடன் சேர்ந்து ஒரு லட்சம் தரப் போகிறார். ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படும் சம்பளம், வசதிகளோடு சேர்த்து கூடுதலாக இவை கிடைக்கப் போகிறது.

தனது கட்சி ஆட்களுக்குக் கொடுக்கவேண்டுமானால், அவர் கட்சி சார்பில் கொடுக்கலாம். அரசாங்கப் பணத்தை எதற்காக எடுக்க வேண்டும்? விஜய்யின் கொடையுள்ளம் ஊர் அறிந்தது ஆகும். (அதை பின்னர் பேசுவோம்)

நிதி நெருக்கடி நேரத்தில் எம்.எல்.ஏ.க்களுக்கு காரும், மாதம் ஒரு லட்சமும் தேவையா? என்று, போராடும் விவசாயிகள் கேட்கிறார்கள். தூய்மைப் பணியாளர்கள் கேட்கிறார்கள். இவர்களை தரதரவென இழுத்துச் சென்று போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டிருக்கிறது விஜய் சர்க்கார்.

**"கடுமையான நிதி நெருக்கடி இருப்பதால் தி.மு.க. உறுப்பினர்கள் 59 பேருக்கும் கார் தேவையில்லை. எங்கள் தலைவர் ஆலோசனைப்படி எங்களுக்கு கார் வேண்டாம்" என்று கம்பீரமாக அறிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள். இது த.வெ.க. அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி விட்டது. 'ஐந்தாண்டுகள் கழித்து திரும்ப வாங்கிக் கொள்வோம்' என்று சமாளிக்கிறார்கள். ஐந்தாண்டு கழித்து அந்தக் காருக்கு என்ன மதிப்பு இருக்கப் போகிறது? த.வெ.க.வுக்கு இருக்கும் மதிப்பைப்போலக் குறைவாகத்தான் இருக்கப் போகிறது.**

**தங்களுக்கு வாகனம் இருப்பதாக 190 பேர் வேட்புமனுவில் சொல்லி இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது வாகனம் எதற்காக அரசு சார்பில் வழங்க வேண்டும்?**

**த.வெ.க.வில் வெற்றி பெற்று வந்திருப்பவர்களில் பலரும் கோடீஸ்வரர்கள். அந்தளவுக்கு சொத்துக் கணக்கு காட்டி இருக்கிறார்கள். அவர்களுக்கு எதற்காக அரசு சார்பில் கார் வழங்க வேண்டும்?**

**கார் வேண்டும் என்று கேட்டவரிடமும் கார் இருக்கிறது. கார் கொடுத்ததை வரவேற்றவரிடமும் கார் இருக்கிறது. பிறகு ஏன் அவர்களுக்கு அரசின் சார்பில் கார் வழங்க வேண்டும்?**

சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனத்தை முதலமைச்சர் விஜய்யின் இந்த அறிவிப்பு சந்தித்துள்ளது. "முதலமைச்சர் ஆனாலும் தான் ஒரு ஆடம்பர நடிகர்தான் என்பதை இதிலிருந்து சொல்லி விட்டார் விஜய். அவரது அவசரத்தை இதன்மூலம் உணர முடிகிறது. தனது ரசிகர் மன்ற நிர்வாகிகளாக இருந்து, த.வெ.க. சார்பில் போட்டியிட்டு முதன் முறையாக சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சில உறுப்பினர்களுக்கு கார் வழங்க வேண்டும் என்றால், விஜய் அவர்கள் தனது சொந்த செலவிலோ அல்லது கட்சி செலவிலோ வழங்கலாம், அதை யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள், மாறாக பாராட்டுவார்கள்.

தமிழக நிதிநிலை படு மோசமாக இருப்பதாகவும், சுமார் ரூ.13 லட்சம் கோடி கடனில் இருப்பதாகவும் வெள்ளை அறிக்கை வெளியிட்டு விட்டு, இப்படி மக்கள் வரிப்பணத்தை, அரசு நிதியை கார் வாங்கப் பயன்படுத்துவது ஆணவத்தின் உச்சம், அறியாமையின் வெளிப்பாடு, நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற மறுக்கும் இந்த கையாலாகாத அரசுக்கு இந்தத் திட்டத்திற்கு மட்டும் எங்கிருந்து பணம் வரும்..?" என்று ஒவ்வொருவரும் கடுமையாக விமர்சித்து வருகிறார்கள்.

"மக்கள் வரிப்பணத்தில் கார் வழங்குவது எந்த வகையில் நியாயம்? கார் இல்லாத உறுப்பினர்களுக்கு மட்டும் சலுகை வழங்கியிருக்கலாமே, அல்லது கட்சி நிதியில் இருந்து கார் வசதியைச் செய்திருக்கலாமே.. எம்.எல்.ஏ.க்களின் வசதிக்காக அரசு கஜானாவைப் பயன்படுத்துவது நியாயமில்லை" என்ற விமர்சனமும் சமூக வலைதளத்தில் வலுத்து வருகிறது.

எதையும் சரியாகக் கணிக்கும் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் சொல்லி இருக்கிறார்: 'தனது கட்சி எம்.எல்.ஏ.க்களை தக்க வைப்பதற்காக கார் கொடுக்கிறார் விஜய்' என்கிறார். அதுதான் உண்மை!





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (24.08.2026) காலை, இயக்குநர் அமிர்தம் – திருமதி வசந்தா ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், டாக்டர் பெ.சதீஸ்குமார் – டாக்டர் ச.கலைச்செல்வி ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் ச.இலக்கியா – டாக்டர் கு.கிரிதரா ஆகியோரின் திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்திய காட்சி! கழக இளைஞர் அணிச் செயலாளரும் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகித்தார். மணவிழாவிற்குத் தலைமையேற்ற கழகத் தலைவர் அவர்களுக்கு இயக்குநர் அமிர்தம் அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

# ஒரு மாற்றம் தமிழ்நாட்டில் ஏற்பட்டு, அது ஏமாற்றமாக மாறியிருக்கிறது!

## இயக்குநர் அமிர்தம் இல்ல மணவிழாவில் கழகத் தலைவர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

சொல்லலாம். அந்த அளவிற்கு நாங்கள் ஒட்டோடும் உறவோடும் இருக்கக்கூடியவர்கள். அந்த அடிப் படையில் தான் இன்றுவரை இருந்து கொண்டிருக்கிறோம்.

அமிர்தம் அவர்களைப் பற்றி நாம் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தலைவர் கலைஞருடைய சகோதரியினுடைய மகன்; அதாவது என்னுடைய அத்தை மகன் அமிர்தம் அவர்கள். அதேபோல கலைஞருடைய இன்னொரு சகோதரியினுடைய மகன்கள்தான் முரசொலி மாறன் மற்றும் முரசொலி செல்வம். இந்த மூன்று பேரும்தான், அது நானாக இருந்தாலும் சரி, அழகிரி அவர்களாக இருந்தாலும் சரி, மு.க.முத்து அவர்களாக இருந்தாலும் சரி, தம்பி தமிழரசு அவர்களாக இருந்தாலும் சரி, செல்வியாக இருந்தாலும் சரி, எங்களை எல்லாம் அவர்கள்தான் வளர்த்தெடுத்தவர்கள். பெற்றவர்கள் தலைவர் கலைஞராக இருந்தாலும், தாயார் தயாளு அம்மாளாக இருந்தாலும், எங்களை வளர்த்தவர்கள் இந்த மூன்று பேரும்தான்.

இந்த மூன்று பேரும்தான் நாங்கள் என்ன படிக்கிறோம், எந்தக் கல்லூரிக்குச் செல்கிறோம், எந்தப் பள்ளிக்குச் செல்கிறோம், என்ன தொழில் செய்ய வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கியவர்கள்.

முரசொலி மாறன் அவர்களைப் பொறுத்தவரையில், பட்டும்படாமல் இருப்பார். முரசொலி செல்வம் அவர்களைப் பொறுத்த வரையில், மிகவும் சாந்தமாக, எதைப் பற்றியும் கவலைப்படாமல், எங்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால் அதை உடனடியாக நிவர்த்தி செய்துவிடுவார். அவ்வளவு சாதகமாக எங்களுக்கெல்லாம் இருப்பார்.

### என்னை அடித்து வளர்த்தவர், அண்ணன் அமிர்தம் அவர்கள்!

ஆனால் அமிர்தம் அண்ணனிடத்தில் அப்படி இருக்க முடியாது; அண்ணன் அமிர்தம் அவர்கள் ரொம்பக் கண்டிப்பானவர். இன்னும் சொல்ல வேண்டும் என்று சொன்னால், என்னைக் கன்னத்திலே அடித்திருக்கிறார்! நான் பல முறை அதை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த அளவுக்குக் கண்டிப்பானவர்; அடித்து வளர்த்தவர் அமிர்தம் அவர்கள். அப்படிப் பட்டவருடைய பேத்திக்கு நடைபெறக்கூடிய மணவிழாவில் கலந்துகொள்ளும் நேரத்தில் நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே சகோதரர் ஆ.இராசா அவர்கள், இன்றைக்கு நாடு எப்படி இருக்கிறது என்பதைப் பற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறார். நான் அதிகமாக அந்தப் பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை; அரசியலாக்க விரும்பவில்லை. இது ஒரு குடும்ப விழாவாக இருக்கிற காரணத்தால் நான் அதிகம் அரசியலுக்குச் செல்லவில்லை.

### டாக்டர்கள் குடும்பத்துத் திருமணம் இது!

ஆனால் ஒன்றை எண்ணிப் பாருங்கள்! இன்றைக்கு அமிர்தம் அவர்களுடைய மகளாக இருந்தாலும், மாப்பிள்ளையாக இருந்தாலும் இரண்டு பேரும் டாக்டர்கள். இன்றைக்குப் பேத்தி இலக்கியாவுக்குத் திருமணம்; அவரும் டாக்டர். அவர் மணமகனாகக் கரம் பிடித்திருக்கக்கூடிய கிரிதரா, அவரும் டாக்டர்! ஆகவே, ஒரு டாக்டர் குடும்பத்தில் நடைபெறக்கூடிய திருமணம் இது. டாக்டர்கள் சேர்ந்து ஒன்றாக இருக்கக்கூடிய குடும்பத்தில் நடைபெறக்கூடிய திருமணமாக இந்தத் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது.

### நமது உயர்வுக்கெல்லாம் காரணம் திராவிட இயக்கம்!

ஒன்றை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அரை நூற்றாண்டுக்கு முன்னால் பார்த்தால், அத்தி பூத்தாற்போலத்தான் ஒரு டாக்டரோ அல்லது பட்டதாரியோ இருப்பார்கள். ஆனால் இன்றைக்கு ஊருக்கு ஊர், கிராமத்திற்கு கிராமம், வீட்டிற்கு வீடு பட்டதாரிகளும் மருத்துவர்களும் இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்குக்காரணம் 'திராவிட இயக்கம்' என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது!

அப்படிப்பட்ட திராவிட இயக்கத்தின் வழித்தோன்றலாக, திராவிட முன்னேற்றக் கழகப் பரம்பரைக் குடும்பத்தில் நடைபெறும் திருமணமாக இந்தத் திருமணம் நடந்து கொண்டிருக்கிறது.ஆனால் இந்த நிலை வருவதற்கு யார் காரணமாக இருந்தார்கள் என்பதை இன்றைக்கு இருக்கக்கூடிய இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்; தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குப் புரிய வில்லை, தெரியவில்லை. அதனால்தான் இராசா சொன்னதுபோன்று, ஒரு மாற்றம் தமிழ்நாட்டில் ஏற்பட்டு, அது ஏமாற்றமாக மாறியிருக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் செய்த தவறு, கோடிக்கணக்கான மக்களை இன்றைக்குத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

எனவே, இந்த நிலை மாறுவதற்கு இந்த மணவிழாவில் கலந்து கொண்டிருக்கக்கூடிய நீங்கள் வரக்கூடிய காலகட்டங்களில் சிறப்பான வகையிலே சிந்தித்துப் பார்த்துச் செயல்பட வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இலக்கியாவாக இருந்தாலும் சரி, டாக்டர் கிரிதராவாக இருந்தாலும் சரி, நான் அதிகமாக அறிவுரை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

### குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்!

உங்களுக்கு நான் வைக்கக் கூடிய ஒரே வேண்டுகோள்: நீங்கள் பெற்றெடுக்கக்கூடிய குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள்! எப்படி தலைவர் கலைஞர் தன்னுடைய குடும்பத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும், எல்லாப் பேத்திகளுக்கும் தமிழ்ப் பெயரைச் சூட்டியிருக்கிறார்களோ, அதேபோன்று நம்முடைய அமிர்தம் அவர்கள் இல்லத்தில் நடைபெறக்கூடிய இந்த மண விழாவில் மணமக்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வது, குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள், சூட்டுங்கள் என்று அன்போடு கேட்டு, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய "வீட்டிற்கு விளக்குகளாக, நாட்டிற்குத் தொண்டர்களாக" மணமக்கள் வாழ்க, வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில்

# 'சொல் புதிது' திட்டத்தின் 16வது கூட்டம்!

## முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 26 –

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் "சொல் புதிது" திட்டத்தின் பதினாறாவது கூட்டம், தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

பேராசிரியர்கள் ஒப்பிலா மதிவாணன், சா.சரவணன், பாரதிபாலன், ம.இளங்கோவன், சிவ முருகேசன், தி.கமலி, ஊடகவியலாளர்கள் மு.முருகேசன், நீச்சல்காரன் இராஜாராமன், ரா.நிரஞ்சன் பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் பின்வரும் 46 சொற்கள் இறுதி செய்யப்பட்டன.

வ.எண் – பிற மொழிச் சொல் – தமிழ்ச் சொல்.

1.Metro station – மாநகர்த் தொடரி நிலையம், 2.Combo offer –இணைச் சலுகை, 3.Vendor compartment – வணிகச் சுமைப் பெட்டி, 4.Toxin free Cookware – நச்சிலா அடுகலன், 5.Trampoline – குதிமேடை, 6.Protocol duty – மரபு முறைப் பணி, 7.Open talk –மனம் திறந்த பேச்சு, 8.House full –அரங்கு நிறை, 9.Resto bar –மது உணவகம், 10.Top Load – மேல் மூடி, 11. Front Load – பக்க மூடி, 12.Laundry label/laundry tag – சலவைக் குறி, 13.Laundry ball – சலவைப் பந்து, 14.Sequins – மின்மினிச் சுடரி, 15. OTT release –இணையப் படத்தள வெளியீடு (இ.ப.த. வெளியீடு), 16. KYC – வாடிக்கையாளர் அறி தகவல் (வா.அ.த), 17.Orbital rocket – சுற்றுப்பாதை ஏவூர்தி, 18. Molecular diagnostics –மூலக்கூறு வழி நோயறிதல், 19.Clinical diagnostics – மருத்துவர் வழி நோயறிதல், 20. Gear shift – இயக்க மாற்றி, 21.Gear stick – இயக்க மாற்றித் தண்டு, 22.License plate –வண்டிப் பதிவெண் தகடு, 23.News fluencer – செய்தி ஊடக ஊக்குநர், 24. Gym fluencer – உடற்பயிற்சி ஊக்குநர், 25. Machine Washable – இயந்திரச் சலவைக்கும், 26.Synthetics– செயற்கை நார்த் துணி, 27. Delicate/Gentle care – மென்சலவை, 28.Hand wash – கைச் சலவை, 29. Do not wash – நீரில் துவைக்கக் கூடாது, 30. Do not wring – பிழியக் கூடாது, 31. Chin harmonization surgery – தாடை ஒத்திசை அறுவை சிகிச்சை, 32. Food festival – உணவுத் திருவிழா, 33. Food carnival – உணவுக் கொண்டாட்ட விழா, 34. Epiq screen – உயர்தரப் பெருந்திரை, 35. Recliner – சாய் விருக்கை, 36.Mindcare clinic – மனநல மருத்துவமனை, 37.Money Mule – பணம் கடத்தி, 38. Drop shipping –கடையில்லா வணிகம், 39. Sound artist – ஒலிக் கலைஞர், 40. Massage centre – தசைப் பயிற்சி மையம், 41.Zero FIR – முதற் கட்டத் தகவல் அறிக்கை, 42.Foot reflexology – பாத அழுத்த சிகிச்சை, 43. Power Slap game – பேயறைப் போட்டி, 44.Baggy Pant – தளர் கால்சட்டை, 45. Flying kick – தாவி உதை/தாவி உதைத்தல், 46.Off the record –உள்ளகப் பதிவு.




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க தி.மு.க. இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த வி.ஹரிஹரசுதன் மகன் சைலேஷுக்கு ரூ.25 ஆயிரம் கல்வி உதவித் தொகைக்கான காசோலை வழங்கியதை முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் முன்னிலையில் வழங்கினார். உடன் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எம்.உதயகுமார், ஆர்.சிபி சக்கரவர்த்தி, ஏ.கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.